தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!

டீப் ஃபேக் உள்ளிட்ட இணையக் குற்றங்களைத் தடுக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

கனிமொழி கருணாநிதி கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி,மார்ச் 22–

டீப் ஃபேக் உள்ளிட்ட இணைய தள குற்றங்கள் பற்றிய கேள்விகளை மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரிடம் திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக எழுப்பினார்.

"சைபர் பாதுகாப்பு நிறுவனமான McAfee நடத்திய சர்வேயில் 75 சதவீத இந்தியர்கள் ஏதேனும் ஒரு வகையான டீப் ஃபேக் உள்ளடக்கத்தைப் பார்த்துள்ளனர் என்பதையும், குறைந்தது 38 சதவீதத்தினர் டீப் ஃபேக் மோசடியால் இலக்காகியுள்ளனர் என்பதையும் தெரிவித்துள்ளது. இதை ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா?

டீப் ஃபேக் உள்ளடக்கம் மற்றும் மோசடிகள் தொடர்பான பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

டீப் ஃபேக் உள்ளடக்கம் மற்றும் மோசடிகளை அடையாளம் கண்டு பாதுகாப்பது குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்க அரசாங்கம் ஏதேனும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் அல்லது திட்டங்களைத் தொடங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?

டீப் ஃபேக் தொடர்பான அபாயங்களைக் குறைப்பதற்கான சட்ட ரீதியான கட்டமைப்புகள் அல்லது ஒழுங்குமுறை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்று கனிமொழி கருணாநிதி கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இவற்றுக்கு ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த பதிலில் வருமாறு:

"தொழில்நுட்ப பயன்பாட்டை ஜனநாயகப்படுத்துவதற்கான மாண்புமிகு பிரதமரின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்து, 'அனைவருக்கும் AI' என்ற கருத்தில் ஒன்றிய அரசும் வலிமையாக இருக்கிறது. இந்த முயற்சி, சமூகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் AI பயன்படுத்தப்பதை உறுதி செய்வதையும், புதுமை மற்றும் வளர்ச்சியை இயக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சுகாதாரம், விவசாயம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் நமது மக்களின் நலனுக்காக செயற்கை நுண்ணறிவின் (AI) சக்தியைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

அதே நேரத்தில், AIயால் ஏற்படும் அபாயங்கள் மற்றும் AI பாதுகாப்பானது மற்றும் நம்பகமானது என்பதை உறுதி செய்வதற்கான கட்டுப்பாடுகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் அறிந்திருக்கிறது.

இந்த விவகாரத்தில் தொடர்புடையவர்களின் விரிவான பொது ஆலோசனைகளுக்குப் பிறகு, ஒன்றிய அரசு 25.02.2021 அன்று தகவல் தொழில்நுட்பம் (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் குறியீடு விதிகள், 2021 ஐ அறிவித்துள்ளது, இதில் 28.10.2022 மற்றும் 6.4.2023 அன்று திருத்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் மற்றும் இது தொடர்பான துறைகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து உள்ளீடுகளைப் பெற்று, தற்போதுள்ள சட்டத்தில் தேவையான மாற்றங்கள் மற்றும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளிட்ட முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

டீப் ஃபேக்குகளை உருவாக்குதல், விநியோகித்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றால் ஏற்படும் சைபர்பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் தனிநபர் மட்டத்திலோ அல்லது தேசிய அளவிலோ ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய டீப் ஃபேக்குகளை உருவாக்க உதவும் தொழில்நுட்பங்கள் தற்போது தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 மற்றும் தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021 போன்ற விதிகளின் கீழ் சட்ட ரீதியாக எதிர்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஐடி சட்டம் மற்றும் ஐடி விதிகள், 2021 ஆகியவை தீங்கு விளைவிக்கும், மற்றும் போலியான உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான கட்டமைப்பை கூட்டாக வழங்குகின்றன, மேலும் இணையத்தில் பயனர்கள் அதன் ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்றன. இதில் செயற்கையாக உருவாக்கப்பட்ட மற்றும் வெளிப்படையாக தவறான உள்ளடக்கம் ஆகியவை அடங்கும்.

மேலும், AI ஆல் இயக்கப்படும் தவறான தகவல்கள் மற்றும் டீப் ஃபேக்குகளின் பரவலான புழக்கத்தால் ஏற்படும் தீங்குகள் மற்றும் குற்றங்களை நிவர்த்தி செய்வதற்கான அவசரத்தை உணர்ந்து, டீப்ஃபேக்குகளை எதிர்ப்பதில் அடையாளம் காணப்பட்ட சவால்களைப் பற்றி விவாதிக்க ஒன்றிய தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் ஏற்கனவே இத்துறை தொடர்பான நிபுணர்கள், சமூக ஊடக நிபுணர்கள் ஆகியோருடன் பல ஆலோசனைகளை நடத்தியது.

இதன் அடிப்படையில் ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் கடந்த 26.12.2023, 15.03.2024 மற்றும் 03.09.2024 தேதிகளில் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள், ஐடி. விதிகள் 2021க்கு உட்பட்ட விதி 3(1)(b) இன் கீழ் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அவர்களின் கடமைகளுக்கு இணங்குவது குறித்து நினைவூட்டப்பட்டனர்.

மேலும் தீங்கிழைக்கிற, போலியாக சித்திரிக்கப்பட்ட செயற்கை ஊடகங்கள் மற்றும் டீப் ஃபேக்குகள் உள்ளிட்ட சட்டவிரோத உள்ளடக்கத்தை எதிர்கொள்வது குறித்தும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

ஒவ்வொரு தகவல் தொழிநுட்ப நிறுவனமும் மற்றும் தளமும் அதன் கணினி வளத்தை AI மாதிரி(கள்)/ LLM/ ஜெனரேட்டிவ் AI, மென்பொருள்கள் பயன்படுத்துவதன் மூலம் எந்தவொரு சார்பு அல்லது பாகுபாட்டையும் அனுமதிக்காது அல்லது தேர்தல் செயல்முறையின் ஒருமைப்பாட்டை அச்சுறுத்தாது என்பதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

பிரதமரின் முதன்மை அறிவியல் ஆலோசகர் (PSA) தலைமையில், இந்திய கல்வித்துறை, தொழில்துறை மற்றும் அரசாங்கத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினருடன், இந்தியாவுக்கான குறிப்பிட்ட ஒழுங்குமுறை AI கட்டமைப்பிற்கான ஆலோசனைக் குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது.

AI இன் பாதுகாப்பான மற்றும் நம்பகமான மேம்பாடு மற்றும் பயன்பாட்டிற்கான பொறுப்பான AI கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பான அனைத்து சிக்கல்களையும் நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

டீப்ஃபேக் வீடியோக்கள் மற்றும் படங்களைக் கண்டறிவதற்கான மென்பொருளை வடிவமைத்தல் மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கு அரசாங்கம் நிதி உதவி அளிக்கிறது.

இணையத்தைப் பயன்படுத்தாமல் டீப்ஃபேக்குகளைக் கண்டறிய ஃபேக் செக் (FakeCheck) என்ற பெயரில் டீப் ஃபேக்குகளைக் கண்டறியும் திறன் கொண்ட ஒரு முன்மாதிரி கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருவி, சோதனை செய்வதற்கும் மேலும் சுத்திகரிப்புக்கான கருத்துகளைப் பெறுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட விசாரணை நிறுவனங்களுடன் பகிரப்பட்டுள்ளது.

India AI மிஷனின் கீழ் AI தொழில்நுட்பங்களின் பொறுப்பான மேம்பாடு, பயன்படுத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வலுவான தேவையை நிவர்த்தி செய்ய வாட்டர்மார்க்கிங் & லேபிளிங், நெறிமுறை AI கட்டமைப்புகள், AI இடர் மதிப்பீடு மேலாண்மை, டீப்ஃபேக் கண்டறிதல் கருவிகள் போன்றவை தொடர்பாக தகுதியான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

இந்திய கணினி அவசரநிலை பதிலளிப்பு குழு (CERT) சமீபத்திய சைபர் அச்சுறுத்தல்கள், பாதிப்புகள் குறித்து எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி தீங்கிழைக்கும் தாக்குதல்கள் மற்றும் கணினிகள், நெட்வொர்க்குகள் மற்றும் தரவைப் பாதுகாப்பதற்கான எதிர் நடவடிக்கைகள் ஆகியவை இதில் அடங்கும்.

இந்தச் சூழலில், செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான பயன்பாடுகளிலிருந்து எழும் எதிர்மறை அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த அறிவுறுத்தலை மே 2023 இல் வெளியிடப்பட்டது. இதையடுத்து நவம்பர் 2024 இல் டீப்ஃபேக் அச்சுறுத்தல்கள் மற்றும் டீப் ஃபேக்குகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அடுத்த அறிவுறுத்தலை வெளியிட்டது.

டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கும் டிஜிட்டல் அபாயங்களைச் சமாளிப்பதற்கும் பயனர்கள் மற்றும் நிறுவனங்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க CERT பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

நவம்பர் 2023 இல் பல்வேறு அமைச்சகங்களுக்கும் டிஜிட்டல் தனிப்பட்ட தரவு அல்லது முக்கியமான தனிப்பட்ட தரவு அல்லது தகவல் உள்ளிட்ட தகவல்களைச் செயலாக்கும் அனைத்து நிறுவனங்களாலும் சைபர் பாதுகாப்பை வலுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தீங்கிழைக்கும் நிரல்களைக் கண்டறிய சைபர் ஸ்வச்ச்தா கேந்திராவை (Botnet Cleaning and Malware Analysis Centre)) இயக்குகிறது, மேலும் அவற்றை அகற்ற இலவச கருவிகளை வழங்குகிறது, மேலும் குடிமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு சைபர் பாதுகாப்பு குறிப்புகள் மற்றும் சிறந்த ஆலோசனைகளை வழங்குகிறது.

நிதித் துறையில் நடக்கும் சைபர் குற்றச் சம்பவங்களை தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் CERT Fin என்ற அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

பயனர்கள் தங்கள் டெஸ்க்டாப்கள் மற்றும் மொபைல் போன்களைப் பாதுகாப்பதற்கும் ஃபிஷிங் தாக்குதல்களைத் தடுப்பதற்கும் பாதுகாப்பு குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

சைபர் தாக்குதல்கள் மற்றும் சைபர் மோசடிகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக CERT தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு மாதம், பிப்ரவரி மாதம் முதல் வாரம் செவ்வாய்க்கிழமை பாதுகாப்பான இணைய தினம், பிப்ரவரி 1 முதல் 15 வரை ஸ்வச்ச்த பக்வாடா மற்றும் புதன்கிழமை 1 ஆம் தேதி சைபர் ஜாக்ரூக்தா திவாஸ் (CJD) ஆகியவற்றைக் கொண்டாடுகிறது.

குடிமக்கள் மற்றும் தொழில்நுட்ப சைபர் சமூகத்தினருக்கான பல்வேறு நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் இது நடத்தப்படுகிறது.

2024 இல் சைபர் விழிப்புணர்வு மாதத்தின் போது, அரசு மற்றும் தொழில்துறை தரப்பினருடன் இணைந்து வினாடி வினா, இணைய கருத்தரங்குகள் போன்ற பல விழிப்புணர்வு நடவடிக்கைகளை CERTIn நடத்தியது. இவ்வாறு பல்வேறு வகைகளில் சைபர் தாக்குதல்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது என ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ்,

அனைத்து மாநிலங்களிலும், முறையான கூலி ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறதா?

மக்களவையில் – டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி

புதுடெல்லி,மார்ச் 22–

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 18 மார்ச் 2025 அன்று மக்களவையில், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும். மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், முறையான கூலி, பயனாளிகளுக்கு, ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறதா? என்றும், தேசிய கைப்பேசி கண்காணிப்பு திட்டம் முறையாக செயல்படுகிறதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் கமலேஷ் பாஸ்வான் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு :-

கடந்த ஜனவரி, 2024 முதலாகவே, நேரடி பயன்கள் மாற்ற முறையில் மகாத்மா காந்தி கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வழங்கப்படும் கூலி, ஆதார் அட்டையுடன் இணைக்கப் பட்டுள்ள வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது என்றும், 13 கோடிக்கும் அதிகமான பயனாளிகள் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் பயனடைந்து வருகின்றனர் என்றும், ஒவ்வொரு நிதியாண்டில், பயனாளிகளுக்கான கூலி, தேவையான அளவு உயர்த்தப்பட்டு வருகிறது என்றும், கடந்த ஆண்டில் ஏழு சதவீத அளவிற்கு கூலி உயர்த்தப்பட்டுள்ளது என்றும் இணையமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும் இந்தியாவிலுள்ள மாநிலங்களில் மகாத்மா காந்தி கிராமப்புற வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் சாரசரி கூலி ரூபாய் 253 ஆக உள்ளது என்றும், குறைந்த பட்சமாக ராஜஸ்தான் மாநிலத்தில் ரூபாய் 207 ஆக உள்ளது என்றும், அதிக பட்சமாக கோவா மாநிலத்தி;ல் ரூபாய் 756 ஆக உள்ளது என்றும், தமிழ்நாட்டில் ரூபாய் 275 ஆக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றும், தேசிய கைப்பேசி கண்காணிப்பு திட்டத்தின் கீழ் பயானளிகளில் வருகைப் பதிவேடு உறுதி செய்யப்படுகிறது என்றும் தேவையான இடங்களில் இதற்கான விதி விலக்கும் அளிக்கப்படுகிறது என்றும், ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் கமலேஷ் பாஸ்வான், பதிலை அளித்துள்ளார்.

தமிழநாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை (MSME)

மேம்படுத்த ஒன்றிய அரசின் பங்களிப்பு என்ன?

மக்களவையில் – கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி,மார்ச் 22–

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை (MSME) மேம்படுத்த நிறுவப்பட்ட புதியதொழிற்பேட்டைகள் அல்லது வணிக காப்பகங்களின் எண்ணிக்கை எவ்வளவு என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரங்கள் வருமாறு :

2019 முதல் தமிழ்நாட்டில் MSMEகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட திட்டங்கள் மற்றும் நிதியுதவி திட்டங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் MSME-களுக்கு வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் MSME தொழில்துறை தொகுப்புகள் மற்றும் தொழில்துறை பூங்காக்களை உருவாக்க ஒன்றிய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட புதிய MSME தொழிற்பேட்டைகள் அல்லது வணிக காப்பகங்களின் எண்ணிக்கை எவ்வளவு எனக் கேள்வி எழுப்பினார்.

MSME-களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழநாட்டு அரசுடன் அமைச்சகம் இணைந்து பணியாற்றியுள்ளதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழநாட்டில் MSME-களின் தொழில்நுட்பம் பயன்பாடு மற்றும் டிஜிட்டல் மாற்றத்தை (Digital Transformation) மேம்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

தொகுதி சீரமைப்பை அமல்படுத்துவது மக்கள் தொகையை வெற்றிகரமாக நிர்வகித்த

மாநிலங்களை நியாயமற்ற முறையில் தண்டிப்பதாகும்!

மாநிலங்களவையில் – பி.வில்சன் பேச்சு!

புதுடெல்லி, மார்ச் 22–

"தொகுதி சீரமைப்பை அமல்படுத்துவது மக்கள் தொகையை வெற்றிகரமாக நிர்வகித்த மாநிலங்களை தண்டிப்பதாகும்" என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் பி.வில்சன் கூறினார்.

இது குறித்து மாநிலங்களவையில் அவர் பேசியதாவது:

நாடாளுமன்றத்தில் பூஜ்ஜிய நேரத்தின்போது, மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி சீரமைப்பினால் ஏற்படவுள்ள ஆபத்துகள் குறித்து கழக மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் பேசியதாவது:

இந்திய அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி, 2026 ம் ஆண்டில் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு செய்யப்படும் எனில், அதனால் ஏற்படவுள்ள ஆபத்தைப் பற்றிய உரை இதுவாகும்.

அனைத்து மாநிலங்களுடைய நியாயமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்காக 1952, 1962 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப் பிறகும் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டது.

சில மாநிலங்கள் குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகளைத் தழுவி ஏற்றுக்கொண்டதாலும், மற்ற மாநிலங்கள் இந்த பிரச்சினையை புறக்கணித்து, மக்கள் தொகையை கட்டுப்பாடு இல்லாமல் வளர அனுமதித்ததாலும் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகள் தோன்றின.

எனவே இந்த சமத்துவமின்மையை நிவர்த்தி செய்வதற்காக, 42 வது அரசியலமைப்பு திருத்தமானது (1976) 1971 மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளின் அடிப்படையில் 25 ஆண்டுகளுக்கு மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பை முடக்கியது. இதன் மூலம் மக்கள் தொகையை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மாநிலங்கள் தங்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தை இழக்காமல் பாதுகாக்கப்பட்டன.

முடக்கம் நீடிக்கப்பட்டது!

2026 – ம் ஆண்டு வாக்கில் அனைத்து மாநிலங்களிலும் மக்கள்தொகை வளர்ச்சி நிலைப்படுத்தப்படும் என்கிற எதிர்பார்ப்பின் அடிப்படையிலான, 2000 வது ஆண்டின் தேசிய மக்கள்தொகை கொள்கையின் பரிந்துரைகளைத் தொடர்ந்து, 84 வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் இந்த முடக்கம் நீட்டிக்கப்பட்டது.

அரசியலமைப்பு திருத்தமானது மக்கள்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்தும் இலக்கை தீவிரமாக பின்பற்ற மாநிலங்களுக்கு உந்துதலை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

மக்கள் தொகை கட்டுப்பாட்டு இலக்கை அடையும் வகையில், தேசிய மக்கள் தொகைக் கொள்கையை அமல்படுத்துவதற்காக 2000 ம் ஆண்டு மே மாதம் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தலைமையில் தேசிய மக்கள்தொகை ஆணையம் நிறுவப்பட்டது.

இருப்பினும், கடந்த 10 ஆண்டுகளாக, தேசிய மக்கள்தொகை ஆணையம் செயலிழந்துவிட்டது என்பதோடு சீரான மக்கள் தொகை கட்டுப்படுத்துதலுக்கான இலக்கில் குறிப்பிடத்தக்க தோல்விக்கு வழிவகுத்தது.

மொத்த கருவுறுதல் விகிதமானது தமிழ்நாட்டில் 1.7 ஆகவும், கேரளாவில் 1.8 ஆகவும் உள்ளது என்று தரவுகள் காட்டுகிறது. இது இந்த மாநிலங்கள் தங்கள் மக்கள்தொகையை வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளன என்பதையே குறிக்கிறது. இதற்கு நேர்மாறாக, உத்தரபிரதேசத்தில் மொத்த கருவுறுதல் விகிதம் 2.4 ஆகவும், பீகாரின் மொத்த கருவுறுதல் விகிதம் 3.0 ஆகவும் உள்ளது, அதாவது இந்த மாநிலங்கள் தொடர்ந்து அதிவேக மக்கள்தொகை வளர்ச்சியை கொண்டிருக்கின்றன. எனவே, தொகுதி சீரமைப்பிற்கான முடக்கத்தை 2026 ம் ஆண்டில் நீக்குவதற்கான உண்மையான காரணம் என்பது இனி செல்லுபடியாகாது என்பதையே இது குறிக்கிறது.

எங்கள் செல்வாக்கை ஏன் இழக்க வேண்டும்?

இத்தகைய சூழ்நிலையில் தொகுதி மறுசீரமைப்பை அமல்படுத்துவது தங்கள் மக்கள் தொகையை வெற்றிகரமாக நிர்வகித்த மாநிலங்களை நியாயமற்ற முறையில் தண்டிக்கும். அதே நேரத்தில் மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்பாடில் வைக்காத மாநிலங்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையிலானதாகும். மேலும், மக்கள் தொகையை திறம்பட கட்டுப்படுத்திய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இதன் விளைவுகள் பேரழிவை ஏற்படுத்தும்.

2026 ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் நாடாளுமன்ற இடங்களின் எண்ணிக்கை உயர்த்தப்படுமேயானால், ராஜஸ்தான், பீகார், மத்தியப்பிரதேசம் மற்றும் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் மொத்தமாக 150 க்கும் அதிகமான கூடுதல் இடங்களைப் பெறக்கூடும். மாறாக, தென் மாநிலங்களானது (தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலுங்கானா) ஒட்டுமொத்தமாக வெறும் 35 இடங்களை மட்டுமே கூடுதலாகப் பெறும்.

அல்லது, 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தற்போதைய 543 இடங்கள் தக்க வைக்கப்பட்டு மறுபங்கீடு செய்யப்பட்டால், தமிழ்நாடானது 8 இடங்களை இழக்க நேரிடும். அதேசமயம் உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் ஆகியவை கூட்டாக 21 இடங்களை கூடுதலாகப் பெறும். அந்த வகையில், இத்தகைய தொகுதிசீரமைப்பின் விளைவாக தேசிய குடும்பக் கட்டுப்பாடு கொள்கையை திறம்பட செயல்படுத்திய மாநிலங்கள் தங்களுடைய அரசியல் பிரதிநிதித்துவத்தை இழப்பது மற்றும் செல்வாக்கு செலுத்தும் திறனை இழப்பது உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொள்ள நேரிடும். மேலும் அவை தேசிய குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றாத மாநிலங்களுக்கு சாதகமாக இருக்கும்.

எங்களுடைய நியாயமான பிரதிநிதித்துவத்தையும், அரசியல் செல்வாக்கையும் நாங்கள் ஏன் இழக்க வேண்டும்? குடும்பக் கட்டுப்பாடு கொள்கையை புறந்தள்ளிய மாநிலங்களுக்கு ஏன் அதிக பிரதிநிதித்துவம் என்கிற வெகுமதி அளிக்கப்படுகிறது. இது நமது தேசிய இலட்சியத்தில் உறுதியாக இருக்கும் மாநிலங்களுக்கு எதிரான அரசியல் சதி என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை..

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த அநீதி குறித்து சரியான தருணத்தில் எச்சரிக்கை விடுத்து, மார்ச் 22 அன்று ஒரு கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்!

2026 க்கு முன்னர் தொகுதி மறுசீரமைப்பிற்கான முடக்கத்தை நீட்டிக்க அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படாவிட்டால், 2026 இல் தானாகவே தொகுதி மறுசீரமைப்பானது தொடங்கிவிடும்.

நியாயமான தொகுதி மறுசீரமைப்பு செயல்முறையை உறுதி செய்யும் அதே வேளையில், தேசிய குடும்பக் கட்டுப்பாடு இலக்குகளை கடைப்பிடிக்கும் மாநிலங்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாடு மற்றும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இந்த அவையில் எடுத்துரைத்து தெளிவுபடுத்துமாறு, பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பி.வில்சன் பேசினார்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட

32 தமிழ்நாட்டு மீனவர்களை மீட்டு வர ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாநிலங்களவையில்–எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி,மார்ச் 22–

அதில் "இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 32 தமிழக மீனவர்களை மீட்டு வர ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? தொடர்ந்து இலங்கை அரசுடன் இதுகுறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதா? மேலும், தமிழக மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க மேற்கொள்ளப்பட்ட இருநாட்டு பேச்சுவார்த்தைகள் குறித்த தகவல்களையும் தெரிவிக்க முடியுமா?" போன்ற கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் அவர்கள், "இலங்கை கடற்படையால் 2025 பிப்ரவரி 22ஆம் தேதி 32 தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை மீறி மீன்பிடித்ததாகக் கூறப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டனர். இந்தியத் துணை தூதரக அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் அவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர். மார்ச் 7 மற்றும் மார்ச் 14 தேதிகளில் இலங்கை நீதிமன்றங்களில் நடைபெற்ற விசாரணைகளின் பின்னர், கைதான 32 மீனவர்களுக்கும் தலா ரூ. 73,000 அபராதம் செலுத்த வேண்டும் அல்லது 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது."

மேலும், "இந்திய அரசு தமிழக மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. கைதான மீனவர்களை விரைவில் விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்கவும் ஒன்றிய அரசு இலங்கை அரசுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது. 2024 டிசம்பர் 16ஆம் தேதி மாண்புமிகு பிரதமர் இலங்கை அதிபருடன் நடைபெற்ற சந்திப்பில் இந்த விவகாரம் முக்கியமாக எடுத்துக்கூறப்பட்டு, தமிழக மீனவர்களின் பிரச்சினைகள் மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது," என்று தெரிவித்தார்.

மேலும் "மீனவர்களின் பிரச்சினைகள் இருநாட